# உலகத் தமிழர் பேரமைப்பு
# முதலாம் ஆண்டு நிறைவு விழா
# மற்றும்
# ‘உலகத் தமிழர் நாள்’ விழா
# மாநாட்டு அறிக்கை

புதுச்சேரி;திருவள்ளுவர் ஆண்டு 2034 கடகம் 11ஆம் நாள்.

உலகத் தமிழர் நாள் விழா மற்றும் - உலகத் தமிழர் பேரமைப்பு ஓராண்டு நிறைவு மாநாடு புதுச்சேரியில் 26 மற்றும் 27-7-2003 நாட்களில் எழுச்சியோடு நடந்தேறியது. தமிழர்களின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு சென்ற ஆண்டு உலகத் தமிழர் பேரமைப்பை தமிழ்த் தேசிய பெருந்தலைவர் பழ.நெடுமாறன் தொடங்கினார். தமிழ் அமைப்புகள் உலகம் முழுவதும் உள்ளன. அவற்றையெல்லாம் அந்தந்த நாட்டில் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைப்புச் செய்து அதனை உலகம் முழுவதும் இணைக்கும் பணியில் உலகத் தமிழர் பேரமைப்பு ஈடுபட்டது. அதற்கான திட்டத்தை பேரமைப்பு உருவாக்கியது. உலகத் தமிழர் வங்கி என தமிழர் பண்பாட்டோடு சேர்ந்த எதிர்காலத் திட்டத்தை முன் வைத்து உலகத் தமிழர் பேரமைப்பை ஐயா பழ.நெடுமாறன் வழி நடாத்தினார். அது உலகத் தமிழர்களை தலை நிமிரச் செய்தது. இதனையெல்லாம் பொறுக்காதவர்கள் கொடும் பொடா சட்டத்தில் ஐயா பழ.நெடுமாறன் அவர்களையும்,சுப.வீரபாண்டியன், தாயப்பன், சாகுல் அமீது,பாவாணன் கா.பரந்தாமன் என்ற தமிழ் ஆர்வலர்களையும், கைது செய்து சிறையில் அடைத்தது. பழ.நெடுமாறனை சிறையில் அடைத்துவிட்டால் அவர் விதைத்த தமிழ் எழுச்சி வித்துக்கள் விளையாது போய்விடும் எனத் தமிழினப் பகைவர்கள் பகல் கனவு கண்டனர். அவர்களின் ‘மமதைக்கனவை’சுக்கு நூறக்கியது உலகத் தமிழர் பேரமைப்பின் ஓராண்டு நிறைவு மாநாடு.

26.7.2003 சனிக்கிழமையன்று மாலையில் புதுச்சேரி வீதிகளில் அணிவகுத்த தமிழர் எழுசிப்பேரணியை திரு.பராங்குசன் தொடங்கிவைத்தார் பெரியார் சிலை அருகே பேரணிபுறப்பட்டது. இரா. வணங்காமுடி, கா.பாலமுருகன்,ஐயப்பன், இரா. மங்கையர்ச்செலவன் ஆகயோர் பேரணிக்குத் தலைமை ஏற்று வழி நடத்தினார்கள். பேரணியில் பழந்தமிழ் இசை முழக்கம் இடம் பெற்றது. பழந்தமிழர் இசைக் கருவிகள் முழவு, துந்துபி போன்றவைளின் பேரிசையொலி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது ஒரு தெம்பூட்டும் செய்தி ஆயிரத்து நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழ் முழக்கம் இட்டபடியே வீறுகொண்டு நடந்தனர். இது பொது-மக்களின் கவனத்தை பெருமளவில் ஈர்த்தது, பேரணி புரட்சியாளர் சிங்காரவேலர் சிலை அருகில் முடிவுற்றது. புதுவை ந.மு தமிழ்மணி நன்றி கூறினார்.

27.7.2003 ஞாயிறு அன்று காலையில் கம்பன் கலையரங்கின்முகப்பில் உலகத் தமிழர்கொடியை உலகத் தமிழர் பேரமைப்பின் செயலர் நாயகம் மருத்துவ அறிஞர்

செ.நெ.தெய்வநாயகம் ஏற்றிவைத்தார். அப்போது உலகத் தமிழர் பண் ஒலிபரப்பட்டது. சரியாக 9 மணிக்கு மாநாடு தொடங்கியது.

பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா குழுவினரின் தமிழர் எழுச்சிப் பாடல்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு அனைவருக்கும் விருந்தாக அமைந்தது. அடுத்த நிகழ்ச்சியாக பேராசிரியர் ம.இல.தங்கப்பா தலைமையில் ‘தமிழ்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சு.வேல்முருகன், வழக்குரைஞர் தமித்தலட்சுமி தீனதயாளன், புலவர் இரா.திருமுருகன், கணினிப் பொறியாளர் பூங்குழலி,சித்தமருத்துவர் தமிழ்வேந்தன் (வேலாயுதம்) ஆகியோரின் கருத்துரைகள், தமிழ் மொழியால் அனைத்தையும் சாதிக்க முடியும் என பறைசாற்றின.

நூல் அரங்கம் தொடங்கியவுடன் உலகத் தமிழப்பண் மீண்டும் ஒலிபரப்பப்பட்டது. அப்போது அரங்கத்தில் குழுமியிருந்தவர்கள் எழுந்து நின்று பாடலுக்கு மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து ‘பழ.நெடுமாறனின் உரை வீச்சு’ நூலை திருச்சி கே.சவுந்தரராசன் வெளியிட இரா.தெரியமாறன்(பத்மநாபன்) பெற்றுக்கொண்டார் . அடுத்து ‘யாதும் ஊரே’ இதழின் உலகத் தமிழர் நாள் சிறப்பு மலரை அதன் ஆசிரியர் நா.வை.சொக்கலிங்கம் முன்னிலையில் கி.த.பச்சையப்பன் வெளியிட மதுரகவி பெற்றுக் கொண்டார். தடா நல்லரசனின் ‘வாக்குமூலம்’ கவிதை நூலை மா.செ.தமிழ்மணி வெளியிட புலவர் கலியபெருமாள் பெற்றுக்கொண்டார். விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘பொடா கொடூரமும் அத்துமீறலும்’ நூலை இயக்குநர் புகழேந்தி வெளியிட செ.ப.முத்தமிழ்மணி பெற்றுக் கொண்டார். நூல்களை வெளியிட்டவர்களின் உரை முத்தாய்ப்பாய் அமைந்திருந்தன.

மதிய உணவுக்குப் பின், அடுத்த நிகழ்ச்சியாக ‘இனமல்லடா அவன் பகைவன் இனியும் ஏமாற வேண்டாம் நீ தமிழன்’ என்ற பாடலுக்கு ஏற்ற வகையில் பரத நாட்டியத்தை புதுவைச் செல்விகள் ரேவதி, சங்கீதா ஆகியோர் கலைநயத்தோடு ஆடினார்கள். பாடலின் கருத்தானது நாட்டியத்தை கூர்ந்து கவனிக்கச் செய்தது.

அடுத்ததாக அன்பு தென்னரசனின் ‘முன்னாளில் ஒரு முதல்வர்’ என்ற நாடகம் நடைபெற்றது. நாடக நடிகர்களின் ஆடைகள் வடிவமைப்பை அன்பு தென்னரசன் பழைமை குன்றாமல் அமைத்திருந்தார். நாடகம் இந்துதத்துவத்தின் முகத்திரையைக் கிழித்தது. ஆனாலும்,ஆரியப் பெண்ணை திருமணம் செய்து கொள்வது என்ற நாடகத்தின் கருத்தானது தமிழர் பண்பாட்டுக்கு சிறப்பு செய்வது அல்ல என பலரும் கருதினார்கள். ஆரிய அமைச்சரின் கைப்பாவையாக இல்லாமல் விழிப்புற்ற அரசனின் நடவடிக்கை புதுமையாக வடிக்கப்பட்டிருந்தது, பாராட்டைப்பெற்றது.

நெய்வேலி போர்க்கலை மாமன்றம் வழங்கிய சிலம்பம் சிறப்பாக அமைந்திருந்தது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சிலம்பம் விளையாட்டை வீரம் ததும்பும் வண்ணம் நடாத்தி காட்டினார்கள். இது தமிழர்களின் வீரத்தை எடுத்துக் காட்டியது. நெய்வேலி போர்க்கலை மன்றத்தின் நிகழ்ச்சி அனைவரின் பாராட்டையும் பெற்றது.

இன்றைய நாட்டு நடப்பில் திருக்குறள் அதிகாரங்கள் என்ற தலைப்பில் பாவலர் செவ்வேள் தலைமையில் பாவரங்கம் நடைபெற்றது. தீவினையச்சம். இறைமாட்சி. சிற்றினஞ்சேராமை, செய்நன்றியறிதல்,கூடாநட்பு, நாடு, பயனில சொல்லாமை, பெரியாரைப் பிழையாமை, படைச்செருக்கு, கொடுங்கோன்மை என்ற தலைப்புகளில் பாவலர்கள் எடுத்து வைத்த கருத்துகள் தமிழ் மக்களிடம் உள்ள அறியாமையை போக்கும் வண்ணம் அமைந்திருந்தன கவிஞர்கள் பூங்கொடி பராங்குசன்,புகழேந்தி, சனார்த்தனன் இளம்வழுதி, இராசேந்திரன், பறம்பை அறிவன், தமிழ்மல்லன், மற்றம் தமிழேந்தி, கவிதைநயம்பட பங்கேற்றார்கள்.

நிறைவரங்கில், உலகத் தமிழர் பேரமைப்பின் செயலர் நாயகம் செ.நெ.தெய்வநாயகம் தலைமையுரை நிகழ்த்தினார்.தொடக்கவுரை இர. அழகிரி வழங்கினார். தொல்.திருமாவளவன், பெ. மணியரசன், பேராசிரியர் பிரபா.கல்வி மணி ,புலவர் இறைக்குருவனார், புலவர் மு.இறைவிழியன், வழக்குறைஞர் அ.தேவநாதன் ,ஓவியர் புகழேந்தி சோ. பாலசுப்ரமனியன்,முனைவர் மணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இரா.தெரியமாறன் நன்றி கூறினார்.முன்னதாக பழ.நெடுமாறன் அவர்களுக்கு ‘உலகப் பெருந்தமிழர்’என்ற பட்டத்தை தொல்.திருமாவளவன் அவர்களும் செயலர் நாயகம் அவர்களும் இணைந்து பழ.நெடுமாறனின் மகள் பூங்குழலியிடம் வழங்கினார்கள். மாநாட்டு அரங்கம் அதிரும் வகையில் வாழ்த்தொலி கிளம்பியது. ஆர்வலர்கள் 50 பேர் தங்களது பிறமொழிப்பெயர்களைத் தூக்கி எறிந்துவிட்டு இனிய தமிழ்ப்பெயர்களை ஏற்றுக்கொண்டதை செ.நெ.தெய்வநாயகம் பழைய ,புதிய பெயர்களை வாசித்து அறிவித்தார்.அவ்வரிசையில் உலகத் தமிழர் பேரமைப்பின் இரா.பத்மநாபன் தமது பெயரை’தெரியமாறன்’ என்று மாற்றிக் கொண்டார். ‘ யாதும் ஊரே’ ஆசிரியர் நா.வை.சொக்கலிங்கம் தமது பெயரை ‘இங்கர்சால்’ என ஏற்றுக் கொண்டார். பாவலர் நந்தகோபால் தமது பெயரை ‘நந்தன்’ என்றும் சித்தமருத்துவர் வேலாயுதம் ‘தமிழ்வேந்தன்’ என்று தமது பெயரை ஏற்றுக்கொண்டார். சித்த மருத்துவர் கருணாகரன் தமது பெயரை ‘பிரபாகரன்’ என்றும், சித்த மருத்துவர் சசிகுமார் தமது பெயரை ‘தமிழமுதன்’ என்றும் மாற்றிக் கொண்டார்கள். அத்துடன் ‘நெடுமாறன்’ என்று ஒரு குழந்தைக்கு திருமாவளவன் பெயர் சூட்டினார்.

விடுதலைச் சிறுத்தைகள் தமிழ்ப் பெயர் எற்பதை ஓர் இயக்கமாக முன்னெடுத்ததற்கு உலகத் தமிழர்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் தமிழகத்திலும் தமிழர்கள் இனிய தமிழ்ப்பெயர் ஏற்பதை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியதோடு அதனைப் பின்பற்றி தமிழ் உணர்வாளர்கள் ஏராளமானோர் தமது பெயர்களை மாற்றிக் கொண்டனர். தமிழர்களின் எழுச்சிக்கும் ஒருங்கிணைப்புக்கும் உறுதுணையானது தூயதமிழ்ப்பெயர் மாற்றம் என்பதை உலகத் தமிழர் பேரமைப்பு கொள்கையாகவே ஏற்றுக் கொண்டது என்பதை இத்தீர்மானம் வெளிக்காட்டியது.

மாநாட்டு நிறைவு அரங்கில் பேசிய தொல். திருமாவளவன் " தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் தேசியம் வளர்க்கப்பட வேண்டும். அதற்கு தமிழ்த்தேசிய பெருந் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை தேவை" என்றும் " பழ.நெடுமாறன் மீது உலகத் தமிழர்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர் மீது எந்தளவுக்கு அன்பு செலுத்துகிறார்கள் என்பதையெல்லாம் நேரில் கேட்டு தெரிந்துகொண்டேன் என்று உணர்வுடன்பேசினார். தமிழ் தேசப்பொதுவுடைமைக் கட்சியின் திரு பெ.மணியரசன் தமிழ் ஒற்றுமையை வலியுறுத்திப்பேசினார். பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணியவர்கள் நேரில் வந்து வாழ்த்துரைத்துச் சென்றார். பேராசிரியர் பிரபா.கல்விமணி (கல்யாணி என்ற இயற்பெயரை மாற்றி கல்விமணி என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்) அவர்கள் தமிழ் மொழியின் அடிப்படை வளர்ச்சியே தமிழர்களை ஒன்றினைக்கும் என்பதை வலியுறுத்தினார். தமிழ் நாட்டுக்கு தேவை ஒரு மொழிக் கொள்கை என்பதை வரலாற்று பூர்வமாக அவர் விவரித்தார்.

மாநாட்டில் காலை முதல் இரவு 9 மணி வரை 'தமிழ்த் தேசியப் புத்தகச்சந்தை' நடைபெற்றது. இந்த பெயரிலேயே பழ.நெடுமாறன் தொடர்ந்து தமிழகமெங்கும் புத்தகச்சந்தை நடாத்தினார். அவர் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு எற்பட்ட தொய்வை உலகத் தமிழர் பேரமைப்பு உந்தித் தள்ளியது. 20க்கும் மேற்பட்ட புத்தக கடைகளை கொண்ட 'தமிழ்த்தேசியப் புத்தகச்சந்தை' புத்தகங்கள் காலையிலிருந்தே அதிகம் விற்பனையாகியதை கடைகாரர்கள் உறுதிப் படுத்தினார்கள். புதுவை ந.மு. தமிழ்மணியும் மருத்துவர் தமிழ்வேந்தனும் மாநாட்டு வேலைகளை சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தனர். தமிழ் உணர்வு பொங்கியது. எங்கும் நிரம்பியது. மாநாட்டின் பெரும்பணியாக, 28 தீர்மானங்கள் முன்னனித் தொண்டர்களால் வாசித்து அளிக்கப்பட்டன. அவையோர் ஒரு மனதாக இந்த 28 தீர்மானங்களையும் கரவொலியோடு ஏற்றுக் கொண்டனர்.உலகத் தமிழர் வாழ்வு, பண்பு, மொழி இவைகள் வளம்பட, எவ்விதங்களில் செயல்படலாம் என்ற இத்தீர்மானங்களை உலகத் தமிழர் பேரமைப்பு தொண்டர்கள் வரும் காலங்களின் தொடர்ந்து நிறைவேற்றுவோம் என உறுதியளித்தார்கள். இத் தீர்மானங்களை **www. tamilinfoservice.com** என்ற இணைய தளத்தில் காணலாம்

தொடர்பு முகவரி
உலகத் தமிழர் பேரமைப்பு.
31. வெங்கடநாராயணா சாலை
தியாகராய நகர்,
சென்னை.600 017.